**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**MCOP No. 598 of 2022**
**Deposition of Witness for : RW 3**

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர் அப்துல் ரஹீம் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | ------ |
| Calling | : | |
| Religion | : | ------ |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.07.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது மோகன்குமார மங்கலம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் Senior Resident Department of Nephrology பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்ற அழைப்பாணையின்படி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையின் பேரில் ஆஜராகி அழைப்பாணையில் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஏழுமலை த/பெ. ராமசாமி வயது 40 என்பவரது விபத்து பதிவேட்டை (எண். 1822137 நாள் - 07.11.2018 நேரம் 12.40 மணி) இன்று ஆஜர் செய்கிறேன். ஏழுமலையில் முகவரி பிள்ளையார் கோயில் தெரு, கொட்டையூர் தென்கரும்பலூர் போஸ்ட், தண்டராம்பட்டு என்று அவரது விபத்து பதிவேட்டில் கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விபத்து பதிவேட்டை நான் தான் எழுதினேன். ரமேஷ் என்பவர் தான் ஏழுமலையை சிகிச்சைக்கு கொண்டு வந்தவர் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். RTA Two wheeler Vs Two wheeler around 10 A.M. date: 07.11.2018 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். Near Way to Vanapuram G.H. என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். H/O of alcohol intake என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். On Examination Patient drowsy pupils reacting என்றால் பரிசோதனையின் போது நோயாளி முழு

நினைவுடன் இல்லை என்று அர்த்தம் மேலும் pupils reacting என்றால் கருவிழி செயல்பாட்டுடன் காணப்பட்டது என்று அர்த்தம். Vitals Stable என்றால் அவருடைய ரத்தக் கொதிப்பு, இதய துடிப்பு மற்றும் சுவாசம் இயல்பாக இருப்பதை குறிக்கும். நோயாளியை அழைத்து வந்த ரமேஷ் என்பவர் நோயாளி மது அருந்தி இருந்ததாக சொன்னதை நான் மேற்படி விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய முழு பரிசோதனையின் படி மேற்படி ஏழுமலை குடி போதையில் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு உறுதியாக சொல்லமுடியாது. ஒரு நபர் மது அருந்திருக்கும் பட்சத்தில் நேரம், காலத்தை சார்ந்து அதன் வாடை அவரை சுற்றி இருக்கும். ஒரு நபர் மது அருந்தி சுமார் 4 - 5 மணி நேரம் அவரை சுற்றி வாடை இருக்க வாய்ப்பு உண்டா என்றால் தீர்க்கமாக சொல்ல முடியாது. எவ்வளவு நேரம் வாடை இருக்கும் என்று கேட்டால் அவர் குடித்திருக்கும் மதுவின் அளவை பொருத்து மாறு படும். விபத்து பதிவேடு உண்மை நகல் எ.ம.சா.ஆ.3.

<u>மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> -

மருத்துவரால் பரிந்துரை செய்யப்படும் ஒரு சில மாத்திரை மருந்துகளை உட்கொண்டாலும் மது வாடை ஏற்பட வாய்ப்புண்டா என்றால் இல்லை. சில மருந்துகளை உட்கொண்டு இருக்கும் நபருக்கு கசப்பான வாடை ஏற்பட வாய்ப்புண்டு. விபத்து பதிவேட்டில் alcohol intake என்று நான் குறிப்பிட்டு இருப்பதால் மட்டுமே அதை வைத்து நோயாளி மது அருந்தி இருந்தார் என அருதியிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். ஒரு நபர் மது அருந்தியிருந்தாரா இல்லையா என்பதை கண்டறிய மருத்துவ துறையில் பிரத்தியேகமாக சில சோதனைகள் செய்யப்படும் என்றால் சரிதான். அத்தகைய சோதனைகளில் Breath Analyser Test, Blood test ஆகியவையும் அடங்கும் என்றால் சரிதான். மேற்படி நோயாளி ஏழுமலைக்கு என்னால் மேற்சொன்ன சோதனைகள் செய்யவில்லை என்றால் சரிதான். ஏழுமலையின் சடல கூராய்வு அறிக்கையை நான் பார்த்து இருக்கிறேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ. 2ல் இறந்தவரின் உடலில் மது அருந்தியிருந்ததற்கான அறிகுறி இருப்பதாக குறிப்பிடப்படவில்லை. ஏழுமலை இறந்த தேதி நேரம் ம.சா.ஆ.2ல் குறிப்பிடப்படவில்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 உடற்கூராய்வு எந்த தேதியில் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று கேட்டால் 08.11.2018ந் தேதி மதியம் 3.15மணிக்கு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** -

எ.ம.சா.ஆ.3 பதிவு செய்யப்பட்ட நேரத்திற்கும், ம.சா.ஆ.2 பிரேத பரிசோதனை செய்யப்பட்ட நேரத்திற்கும் இடையே சுமார் 26 மணி நேரம் இடைவெளி உள்ளது என்றால் சரிதான்.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.